# கீழக்கரை நகர்மன்ற 28.02.2020—ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

கீழக்கரை நகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் புகைமருந்து இயந்திரம் வாங்கி இருப்பில் வைத்துக்கொண்டு உரிய டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு புகைமருந்து இயந்திரம் (2—எண்ணம்) வாஙகுவதற்கு இந்நகர் மன்ற கூட்ட நடவடிக்கைகள் நாள் 31.01.2020—ந் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்குரிய புகைமருந்து இயந்திரம் வினியோகம் செய்வதற்கு 20.02.2020—ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | கொசு மருந்து இயந்திரம் விபரம் | விலையின் விகிதம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | என்.ஆர்.டிரேடர்ஸ், கோயமுத்தூர் | மருதமலை ஏஜென்ஸிஸ், கோயமுத்தூர் | அமுதா ஏஜென்ஸிஸ், கோயமுத்தூர் |
| 1 | Handy Fogg Fogging Machine | எண்ணம் 1—க்கு (GST உட்பட) | 92000/— | 96000/— | 99000/— |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ( எண்ணம் 1—க்கு GST உட்பட) குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள என்.ஆர்.டிரேடர்ஸ், கோயமுத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 697 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :2

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்லும் கல்வெட்டுகள் மற்றும் வாறுகாலின் மேற்புற மூடிகள் சேதமடைந்து கழிவுநீர் செல்ல வழி ஏதும் இல்லாமல் சாலையில் வழிந்தோடுகிறது. இதனால் வாகனம் ஓட்டுபவர்கள், பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் சாலையில் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்படும் நிலையில், அலுவலகத்திற்கு பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

ஆகவே, மேற்காணும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்நகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்லும் கல்வெட்டுகள் மற்றும் வாறுகாலின் மேற்புற மூடிகளை பழுது நீக்கம் செய்யும் பணி செய்வதற்கு ரூ.2,15,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு, இந்நகராட்சி பொறியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.141/2020/இ1)**

அலுவலகக் குறிப்பு:

1. பொதுசுகாதார நலன் மற்றும் இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.2,15,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.698 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :3**

சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியின்படி இந்நகராட்சி பகுதியில் சிறிய அளவிலான நுண் உரம் தயார் செய்தல் (On Site Compost), பெரிய அளவில் குப்பைகளை உருவாக்குபவர்கள் உரம் தயாரித்தல் (Bulk Waste Generation)- நுண் உரகிடஙகு உரம் தயார் செய்தல் மற்றும் மறு சுழற்ச்சி செய்தல் போன்ற பணிகளை (அவுட்சோர்ஸிங முறையில்) 12 பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளுவதற்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண்49/2019/எச்1 நாள் 30.08.2019—ன் படி எவர்கீரின் என்வோரமெண்ட் சர்வீஸ் இராமநாதபுரம் நிறுவனத்திற்கு 01.09.2019 முதல் 29.02.2020 வரை பணி உத்திரவு வழுங்கப்பட்டு பணிகள் நல்ல முறையில் பார்க்கப்பட்டு வருகிறது. தற்போது கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி மேலும் 6 மாத காலத்திற்கு 01.03.2020 முதல் 31.08.2020 வரை பணிநீடிப்பு செய்து பணி உத்திரவு வழுங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண் 49/2019/எச்1)

அலுவலக குறிப்பு:

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக, இந்நகராட்சியில் 12 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் துப்புரவு பணிகள் செய்ய ரூ-10,20,000/-க்கு செலவீனஙகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வழுஙகலாம்.

2. எவர்கீரின் என்வோரமெண்ட் சர்வீஸ் இராமநாதபுரம் நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 31.08.2020 வரை 6 மாத காலத்திற்கு பணிநீடிப்பு செய்ய மன்றம் அனுமதி வழுஙகலாம்

**தீர்மானம் எண்.699 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :4

கீழக்கரை நகராட்சியின் 2018–2019–ம் ஆண்டு வருவாய் மற்றும் மூல நிதி கணக்குகள் மற்றும் குடிநீர் வடிகால் நிதி மற்றும் இதரக் கணக்குகளுக்கான தணிக்கை அறிக்கை இராமநாதபுரம் உள்ளாட்சி நிதித்தணிக்கை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1022/அ1/2019 நாள் 14.02.2020–ன் படியானது 17.02.2020–ந் தேதி பெறப்பட்டது. மேற்கண்ட தணிக்கை அறிக்கை மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கவும் மேலும் தணிக்கை அறிக்கை பத்தி எண் 53–ல் குறிப்பிட்டுள்ள தணிக்கை கட்டணம் ரூ.66,741/– மட்டும் அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.271/2019/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. 2018–2019–ம் ஆண்டு தணிக்கை அறிக்கை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தணிக்கை கட்டணம் ரூ.66,741/–மட்டும் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 700 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :5

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள தெருமின் விளக்குகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 2020–2021–ம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு ஏதுவாக பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய விலைவிகித பட்டியலில் (Schedule of Rate) விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாத கீழ்காணும் தெருமின் விளக்கு பொருட்களுக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெறுவதற்கு 20.02.2020–ந் தேதி இவ்வலுவலக பொறியாளர்களால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன்படி தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் விநியோகம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T.) சேர்த்து 28.02.2020–ந் தேதி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|---|
| | | | V.K.M. Traders Ramanathapuram | New Haaraa Agency, Keelakarai |
| 1 | 250 W SV / MH Heavy duty சோக் | 1 எண்ணம் | 1350 | 1450 |
| 2 | 250 W சோடியம் வேப்பர் லேம்ப் | 1 எண்ணம் | 250 | 300 |
| 3 | 2x24w T5 CFL சோக் | 1 எண்ணம் | 640 | 680 |
| 4 | 1x24w T5 CFL சோக் | 1 எண்ணம் | 420 | 450 |
| 5 | 24 W T5 CFL லேம்ப் | 1 எண்ணம் | 135 | 145 |
| 6 | 2x36w CFL சோக் | 1 எண்ணம் | 640 | 680 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 36w CFL பல்ப் | 1 எண்ணம் | 150 | 175 |
| 8 | 25w LED சோக் | 1 எண்ணம் | 650 | 690 |
| 9 | 18w LED பல்ப் | 1 எண்ணம் | 320 | 350 |
| 10 | 63A காண்டக்டர் | 1 எண்ணம் | 150 | 200 |
| 11 | S.V.L. ஹோல்டர் | 1 எண்ணம் | 1750 | 1950 |
| **சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T.)** | | | **18%** | **18%** |

**(கோப்பு எண்.126/2020/இ1)**

<u>அலுவலக குறிப்பு:-</u>

2020–2021 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக மதிப்பீடு தயார் செய்யும் பொருட்டு வரிசை எண்.1 முதல் 11 வரையிலான தெருமின் விளக்கு பொருட்கள் விநியோகம் செய்ய கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.701 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**